*அதேபோல, தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய காய்கறி மார்க்கெட் ஒட்டன்சத்திரத்தில்தான் இருக்கிறது. அந்தக் காய்கறி மார்க்கெட்டில் குளிர்சாதனக் கிடங்கு போதுமானதாக இல்லை. விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களுக்கு கட்டுப்படியான விலை கிடைக்காத நேரத்தில், அவற்றைச் சேமித்து வைப்பதற்கு ஒரு குளிர்சாதனக் கிடங்கை ஏற்படுத்தித் தர வேண்டும். அங்கு போதுமான நிலம், அதாவது 18 ஏக்கர் நிலம் உள்ளது. எனவே, 100 டன் கொள்ளளவு கொண்ட குளிர்சாதனக் கிடங்கு ஒன்றை அங்கே அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்களின் கோரிக்கையை ஏற்று அங்கு விரைவில் குளிர்சாதனக் கிடங்கை அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*அவருடைய மாவட்ட விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய பயிர்க் காப்பீட்டுத் தொகை அனைத்தும் விரைவில் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 268, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**268—**

## தனி வட்டாட்சியர்

***22453—திருமதி ம. கீதா:**

*மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*2018 ஜூலை 4]*

*(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் வட்டத்திற்கு சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கென தனி வட்டாட்சியர் பணியிடம் உருவாக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் வட்டத்திற்கு, புதிய வட்டங்களை உருவாக்குகின்றபோது, சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கென தனி வட்டாட்சியர் பணியிடம் ஒப்பளிப்பு செய்யப்படவில்லை. ஆகவே, சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கென தனி வட்டாட்சியர் பணியிடம் உருவாக்குவது சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களிடமிருந்து செயற்குறிப்பு பெறப்பட்டிருக்கிறது. அது தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளதால் அதன்மீது மிக விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.*

**திருமதி ம. கீதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைதி, வளம், வளர்ச்சி என்ற தாரக மந்திரத்தை தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கி, நாளையும் நமதே, நாற்பதும் நமதே என்று வீரமுழக்கமிட்ட எங்கள் சிங்கத் தலைவி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும், எங்களுடைய மாவட்டத்தின் மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. என்னுடைய தொகுதியிலுள்ள கடவூர் ஒன்றியத்தில், அதாவது கடவூர்*

ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் சுமார் 23 கிராமங்கள் உள்ளன. இந்தக் கிராமங்களில் உள்ள மக்களுக்குண்டான பட்டா மாறுதல் மனுக்கள் மீதான பணியினையும், சான்றுகள் வழங்கும் பணியினையும் கடவூர் வட்டாட்சியர் அலுவலகத்திலுள்ள தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அவர்களே கவனித்து வருகிறார். பட்டா மற்றும் மனுக்கள்மீது உரிய உத்தரவுகளை விரைவில் வழங்கும்பொருட்டும், சான்றுகள் வழங்கும் பணியினை விரைவுபடுத்தும்பொருட்டும், மண்டல துணை வட்டாட்சியர் பணியிடம் ஒன்றை வழங்குமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10—55*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், குளித்தலை வட்டத்தை இரண்டாகப் பிரித்து, தரங்கம்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு, அரசாணை நிலை எண் 484—ல் புதிதாக கடவூர் வட்டம் உருவாக்கப்பட்டது. கடவூர் வட்டம் உருவாக்கப்பட்டபோது குளித்தலை வட்டத்திலிருந்து 8 பணியிடங்கள் கடவூர் வட்டத்திற்கு மாற்றப்பட்டன. ஒரு வட்டாட்சியர், ஒரு தலைமையிடத்து துணை வட்டாட்சியர் உள்ளிட்ட 9 பணியிடங்கள் கடவூர் வட்டத்திற்கு புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டன; ஆகமொத்தம் 17 பணியிடங்கள் கடவூர் வட்டத்திற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டன. அதனையடுத்து, கடவூர் வட்டத்திற்கு சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கென ஒரு தனி வட்டாட்சியர் பணியிடமும், ஓர் இளநிலை உதவியாளர் பணியிடமும், ஓர் ஈப்பு ஓட்டுநர் பணியிடமும், ஓர் அலுவலக உதவியாளர் பணியிடமும் ஆக மொத்தம் 4 புதிய பணியிடங்களைத் தோற்றுவிக்க மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கருத்துரு அனுப்பியிருக்கின்றார்கள். அதோடு சேர்த்து, சில வட்டங்களிலே சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கான தனி வட்டாட்சியர் பணியிடத்தை உருவாக்குவதற்கான செயற்குறிப்பு பெறப்பட்டிருக்கிறது. ஆகவே, அதோடு சேர்த்து இதனையும் உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆகவே, சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை இந்தியாவிலேயே மாண்புமிகு அம்மாவினுடைய அரசு

*2018 ஜூலை 4]*

*சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்ற காரணத்தினாலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனி வட்டாட்சியர் வேண்டுமென்று மக்கள் நலன் சார்ந்திருக்கின்ற கோரிக்கையைக் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, மிக விரைவாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.*

**திருமதி ம. கீதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடலூர் ஊராட்சியில் மைலம்பட்டி என்ற கிராமம் உள்ளது. அந்த மைலம்பட்டி குறு வட்டத்தில் மட்டும் 16 கிராமங்கள் உள்ளன. மைலம்பட்டி குறு வட்ட வருவாய் ஆய்வாளர் குடியிருப்பு அமைந்துள்ள கீழப்பகுதி கிராமத்திற்கும், தொண்டமாங்கினம், மத்தகிரி, பாப்பாயம்பாடி மற்றும் காளையாப்பட்டி ஆகிய கிராமங்களுக்குமிடையில் சுமார் 8 முதல் 10 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. மைலம்பட்டி குறு வட்டத்தில் சுமார் 70 ஆயிரம் முதல் 75 ஆயிரம் மக்கள் உள்ளனர். எனவே, பொதுமக்களின் நலனைக் கருதி, அவர்களுக்கு நலத் திட்டங்கள் அனைத்தும் விரைவாகச் சென்றடைய வேண்டுமென்ற நோக்கத்தில், மைலம்பட்டி குறு வட்டத்தினை இரண்டு குறு வட்டங்களாகப் பிரித்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறு வட்டத்தை இரண்டாகப் பிரித்து, மக்களின் வசதிக்காக ஆட்சி எல்லைகளை மாற்றுகிற அந்தக் கோரிக்கையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, மிக விரைவாகச் செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி அவர்கள்.

**திரு. ஆர். காந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் வாலாஜாபேட்டை வட்டாட்சியர் அலுவலகம் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டது; அது மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அதற்குப் புதிய கட்டடம் கட்ட இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதை இந்த ஆண்டே பரிசீலனையில் எடுத்துக்கொள்வதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 269, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**269—**

## தொழிற்பயிற்சி நிலையம்

***25650—திரு. கே.எஸ். மஸ்தான்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,